இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

திங்கள்கிழமை 20-10-2025

ஆணவப் படுகொலைகளுக்கு எதிராக...!

ஆணவப் படுகொலைகளுக்கு எதிரான கடுமையான சட்டத்தைக் கொண்டு வர இருக்கிறோம் என்ற மகத்தான அறிவிப்பை மாண்புமிகு முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றத்தில் அறிவித்துள்ளார்கள்.

தமிழ்நாடு அரசு ஆணவப் படுகொலைகளைத் தடுக்கும் நோக்கில் உரிய சட்டம் இயற்றத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கும் என்று உறுதி அளித்துள்ளார் முதல் அமைச்சர்.

"இது குறித்து தேவையான பரிந்துரைகளை அளிப்பதற்காக ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி திரு. கே.என்.பாஷா அவர்கள் தலைமையில் சட்ட வல்லுநர்கள், முற்போக்குச் சிந்தனையாளர்கள், மானுடவியல் அறிஞர்களைக் கொண்ட ஒரு ஆணையம் அமைக்கப்படும் என்பதை என்னுடைய முக்கியமான அறிவிப்பாக இம்மாமன்றத்தில் அறிவிக்கிறேன். இந்த ஆணையம் அரசியல் இயக்கங்கள், சட்ட வல்லுநர்கள், சமூகச் செயற்பாட்டாளர்கள், பாதிக்கப்பட்ட மக்கள் என அனைத்துத் தரப்பினரின் கருத்துகளையும் பெற்று, இப்பொருள் குறித்து உரிய பரிந்துரைகளை வழங்கும். அதனடிப்படையில், தமிழ்நாடு அரசு ஆணவப் படுகொலைகளைத் தடுக்கும் நோக்கில் உரிய சட்டம் இயற்றத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கும்" என்று உறுதி அளித்துள்ளார் முதல் அமைச்சர்.

சமூக நீதி வரலாற்றில், சமநீதி வரலாற்றில், சமூக சீர்திருத்த வரலாற்றில், பெண் உரிமை வரலாற்றில் இது மிகமிக முக்கியமான அறிவிப்பு ஆகும்.

கொலை வழக்குகள் உள்ளிட்ட குற்ற வழக்குகளில் தண்டனை பெற்றுத் தருவதற்கு இந்திய குற்றவியல் தண்டனைச் சட்டம் இருக்கிறது. பட்டியல் சமுதாயத்தைச் சேர்ந்தவருக்கு இழைக்கப்படும் கொடுமைகளில் இருந்து காக்க வன்கொடுமை தடுப்புச் சட்டம் உள்ளது. நமது சட்டங்கள் மிக மிகக் கடுமையானவை. இதனை முறையாகப் பயன்படுத்தி, வழக்கை ஒழுங்காக நடத்தி தண்டனை பெற்றுத்தர முடியும். இது போன்ற ஆணவப் படுகொலை வழக்குகள் அனைத்திலும் கடுமையான பிரிவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. தொடர்புடைய குற்றவாளிகள் உடனடியாகக் குண்டர் தடுப்புச் சட்டத்தில் கைது செய்யப்பட்டு வருகிறார்கள். இருப்பினும் இதற்கென தனிச்சட்டம் தேவை என்ற கோரிக்கை எழுந்துள்ளது.

சிறுவர்கள், குழந்தைத் தொழில் தடுப்பு, ராகிங் தடுப்பு, ஈவ்டீசிங் தடுப்பு, குடும்ப வன்முறைத் தடுப்பு போன்ற பல சட்டங்கள் சமுதாயத்தில் பல நன்மைகளையும் மாற்றங்களையும் ஏற்படுத்தி உள்ளன. அந்த வரிசையில் இதனையும் நோக்க வேண்டி உள்ளது.

திராவிடர் கழகம் சார்பில் அக்டோபர் 4 ஆம் நாளன்று செங்கல்பட்டு மாநகரில் சுயமரியாதை இயக்க நூற்றாண்டு திராவிடர் கழக மாநில மாநாடு நடைபெற்றது. அதில், **"ஜாதி ஆணவக் கொலைகளைத் தடுத்து நிறுத்த சட்டம் அவசியம் தேவை"** என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அம்மாநாட்டில் உரையாற்றிய முதல் அமைச்சர் அவர்கள், **"மானமிகு ஆசிரியர் அவர்கள் உருவாக்கிக் கொடுத்துள்ள மாநில மாநாட்டுத் தீர்மானங்களைப் பார்த்தேன். சமூகக் களத்தில் நீங்கள் அதற்கான பரப்புரையைச் செய்யுங்கள். திராவிட முன்னேற்றக் கழகமானது ஆட்சியைப் பயன்படுத்தி சட்டங்களாக, விதிமுறைகளாக, நெறிமுறைகளாக வகுப்போம்"** என்று உறுதி அளித்தார்கள். அத்தகைய உறுதிமொழியை உடனடியாகச் செயல் வடிவம் கொடுத்துவிட்டார் முதல் அமைச்சர் அவர்கள்.

இதனைத்தான் திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்களும் சுட்டிக் காட்டி வாழ்த்தி இருக்கிறார்கள். **" 1929 செங்கல்பட்டு சுயமரியாதை இயக்க முதல் மாகாண மாநாட்டின் தீர்மானங்களைச் சட்டமாக்கிட 40 முதல் 60 ஆண்டுகள் ஆயின. ஆனால், 4.10.2025 செங்கல்பட்டு மறைமலைநகர் சுயமரியாதை இயக்க நூற்றாண்டு நிறைவு விழா மாநாட்டுத் தீர்மானங்கள் அடுத்த 13 நாள்களில் செயல்பாட்டுக்கு வர ஏற்பாடுகள் தொடக்கம்! என்னே வேகம்! என்னே விவேகம்!!இதுதான் 'திராவிட மாடல்' ஆட்சியின் மாட்சி!"** என்று பாராட்டி இருக்கிறார் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள்.

'திராவிட மாடல்' ஆட்சியின் உண்மையான வெளிப்பாடு இது போன்ற அறிவிப்புகளில் தான் முழுமை அடைகிறது. அதனைத் தான் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் செய்துள்ளார்கள்.

அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர், பெரியார் பிறந்தநாளில் உறுதிமொழி, அம்பேத்கர் பிறந்த நாளில் உறுதிமொழி, மாணவர் விடுதிகளில் சாதிப் பெயர் நீக்கம், தெருக்களில் சாதிப் பெயர்கள் நீக்கம்.... இப்படி எத்தனையோ சமூகசீர்திருத்த சாதனைகளை மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் செய்து வருகிறார்கள். அந்த வகையில் ஆவணப் படுகொலைகளைத் தடுக்கவும் அனைத்து முயற்சிகளையும் செய்து வருகிறார்கள்.

இது தொடர்பாக மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தில் ஆற்றிய உரை என்பது உன்னிப்பாகக் கவனிக்கத்தக்க உரையாக அமைந்திருந்தது. **" நாட்டில் நடைபெறும் சில சம்பவங்கள் நமது மனதை வேதனையடைய வைத்துள்ளன. இதற்காகவா நமது தலைவர்கள் போராடினார்கள், நாம் போராடி வருகிறோம் என்ற வேதனை ஏற்படுகிறது. உலகம் அறிவுமயமாகி வருகிறது. ஆனால், 'அன்புமயம் ஆவதை எது தடுக்கிறது?' என்பதுதான் இன்று சீர்திருத்த எண்ணம் கொண்டவர்களை வாட்டி வருகிறது. உலகம் முழுக்க பரவி, அறிவினால் மதிக்கப்பட்டு வரும் நம் தமிழ்ச் சமுதாயம், உள்ளூரில் சண்டை போட்டுக்கொள்வது என்ன நியாயம்?"** என்று கேட்டுள்ள முதல் அமைச்சர் அவர்கள், அனைத்து அரசியல் கட்சிகளும் சமூக சீர்திருத்த பரப்புரையைச் செய்ய வேண்டும் என்று கோரிக்கை வைத்துள்ளார் முதல் அமைச்சர் அவர்கள்.

'சாதியை ஒழித்துவிடலாம், சாதிப் பெருமையை ஒழிப்பது சிரமம்' என்றார் தந்தை பெரியார். 'நீ வேறு, நான் வேறு என்பது மட்டுமல்ல, நான் உயர்வு நீ தாழ்வு என்று கற்பிப்பது சாதி' என்றார் அண்ணல் அம்பேத்கர். அதனால் தான் அது சிக்கலுக்குரியதாக இருக்கிறது. இத்தகைய சிக்கலான சாதிய மனோபாவத்தை மனமாற்றங்கள் மூலமாக மாற்ற அனைத்து இயக்கங்களும் தங்கள் பணியை முடுக்கி விடுதல் வேண்டும்.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தமிழினத் தலைவர் கலைஞர் போன்றோர் வழித்தடத்தில் நடப்பவர்க்கு மட்டுமல்ல மற்ற அனைவருக்கும் இந்தக் கடமை இருக்கிறது. பொறுப்பு இருக்கிறது. ஒரு சம்பவம் நடந்ததும், 'இது தான் பெரியார் மண்ணா?' என்று மண் மாதிரி கேட்காமல், 'இத்தகைய கொடூரத்துக்கு எதிராக, அதனைத் தடுக்க நாம் என்ன செய்தோம்?' என்ற கேள்வியை குற்றம் சாட்டுபவர்கள் தங்களது மனச்சாட்சியை நோக்கி எழுப்பிக் கொண்டு செயல்பட வேண்டும்.

"நலம் காக்கும் ஸ்டாலின் திட்ட முகாம்" கடந்த வாரம் வரை

372 முகாம்கள் நடத்தப்பட்டு 5,91,455 பேர் பயன் பெற்றிருக்கிறார்கள்!

மருத்துவம் – மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்!

சென்னை, அக்.20 - மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று முன்தினம் (18.10.2025) திருவள்ளூர் மாவட்டம், திருவாலங்காடு அரசு மேல்நிலைப்பள்ளியில் நடைபெறும் "நலம் காக்கும் ஸ்டாலின்" திட்ட முகாமினை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, பெறப்பட்ட மனுக்கள் மீது உடனடி தீர்வுக்கான சான்றிதழ்களை வழங்கினார். பிறகு அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

"நலம் காக்கும் ஸ்டாலின்" திட்டம்

தமிழ்நாட்டில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் பல்வேறு சிறப்பு திட்டங்கள் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. அந்த வகையில் "நலம் காக்கும் ஸ்டாலின்" எனும் மகத்தான திட்டம் கடந்த 02.08.2025 அன்று சென்னையில் முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.

இந்த திட்டத்தை பொறுத்தவரை தமிழ்நாடு முழுவதும் 1,256 முகாம்கள் நடத்திட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பெருநகர சென்னை மாநகராட்சியில் 15 முகாம்களும், சென்னைக்கு அடுத்து 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட 5 மாநகராட்சிகளில் தலா 4 வீதம் 20 முகாம்கள் நடத்தப்படவிருக்கிறது.

10 இலட்சத்திற்கும் குறைவான மக்கள் தொகை கொண்ட 19 மாநகராட்சிகளில் தலா 3 வீதம் 57 முகாம்கள் என்கின்ற அளவிலும், தமிழ்நாட்டில் உள்ள 388 வட்டாரங்களில் தலா 3 என்கின்ற வகையிலும் ஆக ஒட்டு மொத்தம் 1,256 முகாம்கள் நடத்தப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்.

தமிழ்நாட்டில் ஒவ்வொரு சனிக்கிழமையும் 38 வருவாய் மாவட்டங்களில் இம்முகாம்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. கடந்த சனிக்கிழமையோடு சேர்த்து 10 வாரங்கள் இம்முகாம்கள் நடத்தப்பட்டிருக்கிறது. இம்முகாம்கள் 372 இடங்களில் நடைபெற்றுள்ளது. இதில் பயன்பெற்றவர்களின் எண்ணிக்கை 5,91,455 பேர். இன்று தமிழ்நாடு முழுவதும் 35 இடங்களில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இந்த முகாம்களில் மாற்றுத்திறனாளிகளுக்கு சான்றிதழ்கள் தரப்பட்டு வருகிறது. இந்த சான்றிதழ் பெறுவதற்கு மருத்துவர்களின் ஆலோசனை, மருத்துவர்களிடத்தில் அவர்களுக்கு எத்தனை சதவிகிதம் அளவிற்கு பாதிப்பு இருக்கின்றது என்று அறிந்து சான்றிதழ் வழங்குதல், தொடர்ந்து வருவாய் அளவில் சான்றிதழ் பிறகுதான் மாற்றுத்திறனாளி சான்றிதழ் பெற முடியும் என்கின்ற நிலை இருந்தது.

எனவே மாற்றுத்திறனாளிகள் பல்வேறு அலுவலகங்களுக்கு சென்றுதான் இச்சான்றிதழ் பெறும் நிலை இருந்தது. அந்த வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அந்தந்த பகுதிகளிலேயே நடைபெறுகின்ற முகாம்களில் மாற்றுத்திறனாளிகள் நேரிடையாக வருகை புரிந்து அவர்களுடைய மாற்றுத்திறன் அளவினை மருத்துவர்களிடம் காண்பித்து அன்றைய நாளிலேயே சான்றிதழ்கள் பெறும் நிலையினை தந்திருக்கிறார்கள்.

மேலும் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீடு திட்டத்தைப் பொறுத்தவரை தமிழ்நாட்டில் 1.47 கோடி குடும்பங்கள் பயன் பெற்று வருகின்றனர். இருந்தாலும் புதியதாக குடும்பங்கள் இத்திட்டத்தில் பதிவு செய்தவுடன் அவர்களுக்கும் காப்பீடு அட்டைகள் உடனடியாக வழங்கப்பட்டு வருகிறது.

மேலும் இம்முகாமில் பொது மருத்துவம், குழந்தைகள் நல மருத்துவம், இருதய மருத்துவம், எலும்பியல் மருத்துவம், நரம்பியல் மருத்துவம், தோல் மருத்துவம், மகப்பேறியியல் மற்றும் மகளிர் நல மருத்துவம், கண் மருத்துவம், காது மூக்கு

தொண்டை மருத்துவம், இயன்முறை மருத்துவம், பல் மருத்துவம், மனநல மருத்துவம், நுரையீரல் மருத்துவம், நீரிழிவு மருத்துவம், கதிரியக்கவியல் மருத்துவம், பொது அறுவை சிகிச்சை, சித்தா மற்றும் இந்திய முறை மருத்துவம் போன்ற 17 வகையான மருத்துவ முறைகள் இந்த முகாம்களில் நடத்தப்படவிருக்கிறது.

பொதுவாக முதலமைச்சர் அவர்களின் வாயிலாக மக்களைத் தேடி மருத்துவம் எனும் மகத்தான திட்டம் நடைமுறையில் இருக்கின்றது. இதுவரை 2.5 கோடி பயனாளிகளின் வீடுகளுக்கே சென்று மருந்துகள் வழங்கப்படும் நிலையில் முழு உடற்பரிசோதனை என்னும் வகையில் இந்த முகாம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

தனியார் மருத்துவமனைகளில் முழு உடற்பரிசோதனைகளுக்கு ரூ.20,000/ வரை செலவாகும். அரசு மருத்துவமனைகளில் கூட ரூ.4,000/ வரை செலவாகும். ஆனால் கட்டணமின்றி இந்த முகாம்களில் முழு உடற்பரிசோதனை செய்யப்படுகிறது. இன்று 11வது வார முகாம்களாக திருவள்ளூர் மாவட்டம், திருவாலங்காடு அரசு மேல்நிலைப்பள்ளியில் இம்முகாம் நடைபெற்று வருகிறது. மாலை 3 மணி நிலவரப்படி தமிழ்நாடு முழுவதும் 41,343 பேர் பயன் பெற்று இருக்கிறார்கள்.

திருவள்ளூர் மாவட்டத்தை பொருத்தவரை அறிவிக்கப்பட்டிருக்கின்ற முகாம்களின் எண்ணிக்கை 45, இதுவரை 10 முகாம்கள் முடிவுற்று 19,774 பேர் பயன் பெற்றுள்ளனர். இந்த முகாமில் பங்கேற்பதற்கு ஆயிரக்கணக்கான பொது மக்கள் கலந்து கொண்டு பயன்பெற்று வருகிறார்கள்.

வட கிழக்கு பருவ மழை முன்னெச்சரிக்கை நடவடிக்கை தொடர்பான கேள்விக்கு

கடந்த இரண்டு நாட்களுக்கு முன்னாள் வடகிழக்கு பருவமழையொட்டி எடுக்கப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறித்து முக்கிய சேவை துறைகளுடன் ஒரு கூட்டம் நடத்தியிருக்கிறோம். பொதுவாகவே இந்தக் கூட்டம் என்பது கடந்த காலங்களில் எப்போதும் நடத்தப்படாத ஒன்று.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மக்கள் நல்வாழ்வுத்துறை, ஊரக வளர்ச்சித் துறை, நகராட்சி நிர்வாத்துறை ஆகிய சேவை துறைகளை ஒருங்கிணைத்து ஒவ்வொரு ஆண்டும் வடகிழக்கு பருவ மழைகளுக்கு முன்னாள் நாம் செய்ய வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து விவாதித்து அவரவர்களுக்கிடையே பொறுப்புகளை ஆவணங்களாக தந்து அனுப்புவது என்பதும், தொடர்ந்து அவரவர் மாவட்டங்களுக்கு மாவட்ட அளவில் கூட்டம் நடத்தி மக்களை பாதுகாப்பதற்கு மழை பாதிப்புகளிலிருந்து அவர்களை தற்காத்துக் கொள்வதற்கும் நடவடிக்கைகளை தொடர்ந்து எடுத்து வருகிறார்கள்.

அதனால்தான் கடந்த 4.5 ஆண்டுகளில் ஏற்பட்ட மிகப் பெரிய புயல் பாதிப்புகள், மழை பாதிப்புகளிலிருந்து மக்கள் பெரிய அளவில் பாதுகாக்கப்பட்டிருக்கிறார்கள். மக்கள் நல்வாழ்வுத்துறையைப் பொறுத்தவரை மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்கள் ஒவ்வொரு ஆண்டும் 10,000 முகாம்கள் என்று அறிவித்து அதிகபட்மாக 26,000 முகாம்கள் வரை நடத்தப்பட்டு பல இலட்சம் பேர் பயன்பெற்றிருக்கிறார்கள்.

அந்த வகையில் இந்த ஆண்டும் கூட கூட்டம் நடத்தப்பட்டிருக்கிறது என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித் தலைவர் மு.பிரதாப், திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி. ராஜேந்திரன், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறை இயக்குநர் மரு.அ.சோமசுந்தரம், மாவட்ட சுகாதரா அலுவலர்கள் மரு.பிரியாராஜ் (திருவள்ளூர்), மரு.பிரபாகரன் (பூவிருந்தவல்லி) திருவள்ளூர் அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர் மரு. ரேவதி மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

மயிலாடுதுறை மாவட்டத்தில் 2024-25 க்கு உளுந்து - பச்சை பயறுக்கான

காப்பீட்டுத் தொகையை பெற்றுத் தந்த முதல்வருக்கு நன்றி!

காவேரி டெல்டா பாசனதாரர் முன்னேற்ற சங்கம் அறிக்கை!

மயிலாடுதுறை, அக் 20 - உளுந்து மற்றும் பச்சை பயறுக்கான காப்பீட்டு தொகையை பெற்றுத் தந்த தமிழக முதல்வர் அவர்களுக்கும் வேளாண் மற்றும் உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றி!

மயிலாடுதுறை மாவட்டத்தில் 2024 - 25க்கு உளுந்து மற்றும் பயறுக்கான காப்பீடு AICல் செய்த விவசாயிகள் அனைவருக்கும் இன்சூரன்ஸ் தொகையை விவசாயிகளின் வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டு வருகிறது!

தீபாவளி நேரத்தில் விவசாயிகளுக்கு இது மிகவும் மகிழ்ச்சிகரமான செய்தியாகும்.

உளுந்துக்கு காப்பீடு செய்த 10,726 நபர்களுக்கு ஆறு கோடியே 47 லட்சம் ரூபாயும் பச்சை பயறுக்கு காப்பீடு செய்த 13,007 நபர்களுக்கு ஏழு கோடியே 43 லட்சம் ரூபாயும் ஆக மொத்தம் 23 ஆயிரத்து 733 விவசாயிகளுக்கு 13 கோடியே 90 லட்சம் ரூபாய் மாநில தொகையினை தீபாவளி நேரத்தில் விடுவித்த தமிழ்நாடு முதல்வர் அவர்களுக்கும் பெற்றுத் தந்த உழவர் நலன் மற்றும் வேளாண் துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்களுக்கும் மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் ஹெச். எஸ் ஸ்ரீகாந்த், டி.ஆர்.ஓ. என். உமா மகேஸ்வரி, மாவட்ட வேளாண் இணை இயக்குனர் ஜே.சேகர் ஆகியோருக்கு விவசாயிகளின் சார்பில் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம்.

(குறிப்பு :மத்திய அரசு அதன் பங்கு உளுந்து பயறுக்கான இன்சூரன்ஸ் தொகையை இன்னமும் வழங்கப்படவில்லை என்பதும் தற்போது வரவு வைக்கப்பட்டு வருவது மாநில அரசின் பங்குத்தொகை மட்டும் என்பது குறிப்பிடத்தக்கது)

இவ்வாறு மயிலாடுதுறை மாவட்டம் காவேரி டெல்டா பாசனதாரர் முன்னேற்ற சங்கம் தெரிவித்துள்ளது.

சித்த மருத்துவ, தனியார் பல்கலைக்கழகங்கள் உருவாக்கம் உட்பட

18 சட்ட மசோதாக்கள் பேரவையில் நிறைவேற்றம்!

சென்னை, அக். 20 - சட்டப்பேரவை கூட்டத்தின் நிறைவு நாளான நேற்று, தனி யார் மற்றும் சித்த மருத்துவ பல்கலைக்கழகங்கள் உருவாக் கும் சட்டம் உட்பட 18 சட்ட மசோதாக்கள் நிறைவே ற்றப்பட்டன. சட்டப்பேரவையில் ஊரக உள்ளாட்சிகளில் கழிவுநீக்க செயல்பாடுகளுக்கு உரிமம் வழங்கும் வகையில் ஊராட்சிகள் சட்டத்திருத்த முன்வடிவை அமைச்சர் ஐ. பெரியசாமி நேற்று அறிமுகம் செய்தார். நெடுஞ்சாலை, கடல் சரக்கு போக்குவரத்தில் குற்றங்கள் குறித்து, நீதிமன்ற வழக்குகள் வரும்போது, சிறை தண் டனை, அபராதம் விதிப்பதை தவிர்த்து பணம் சார்ந்த உரிமையியல் தண்டத்தொகை விதிப் பதை செயல்படுத்தும் வகை யில், நெடுஞ்சாலைத் துறை, கடல்சார் வாரிய சட்டங்களில் திருத்த முன்வடிவுகளை அமைச்சர் எ.வ. வேலு அறிமுகம் செய்தார்.

மின்துறை, தொழிற் கல்வி நிலையங்கள், தனியார் கல் லூரிகளில் பணம் சார்ந்த தண் டத்தொகை விதிப்பதை செயல் படுத்தும் சட்ட முன்வடிவுகளை அமைச்சர்கள் சிவசங்கர் மற்றும் கோவி.செழியன் ஆகியோர் அறிமுகம் செய்தனர்.

அதேபோல், சமய நிறுவனங்கள் கல்வி நிறுவனங்களை நிறு வுதல், பராமரித்தல், அர்ச்சகர் கள், இசைக் கலைஞர்கள், ஓது வார்கள், அத்யாபகர்கள், வேதபாராயணம் செய்பவர்களுக்கான பயிற்சிப் பள்ளிகளை நிறுவ இந்து சமய அறநிலையக் கொடைகள் சட்டத்தில் திருத்தம் செய்வதற்கான மசோ தாவை அமைச்சர் பி.கே. சேகர்பாபு அறிமுகம் செய் தார். இதைத்தொடர்ந்து, நிதி யொதுக்கச் சட்டமுன்வடிவை அமைச்சர் தங்கம் தென்னரசு அறிமுகம் செய்தார்.

இவற்றைத் தொடர்ந்து, இந்த சட்ட முன்வடிவுகள், ஆய்வு செய்யப்பட்டு நிறைவேற்றப்பட்டன. இவைத விரகடந்தாண்டு பேரவையில் நிறைவேற்றி அனுப்பப்பட்டு, ஆளுநரால் திருப்பியனுப்பப்பட்ட நிதி நிலை நிர்வாக பொறுப்புடைமை திருத்தச்சட்ட முன்வடிவு மீண்டும் நிறைவேற்றப்பட்டது. மேலும், சட்டப்பேரவை முன்னாள் உறுப்பினர்கள் ஓய்வூதி யம் உயர்வு, அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக ஆட்சி மன்றக்குழுவில் மாற்றுத்திற னாளிகளை நியமித்தல், வழக் கிழந்த சட்டங்களை நீக்கும் நீக்கறவு சட்ட முன்வடிவுகள்,ஊராட்சிகளின் தனி அலுவலர் கள் பதவிக்காலத்தை மேலும் 6 மாதத்துக்கு நீடித்தல், ஊரகஉள்ளாட்சிகளில் கழிவுநீக்க செயல்பாடுகளுக்கு உரிமம் வழங்குதல் ஆகிய சட்ட முன் வடிவுகள் ஆய்வு செய்யப்பட்டு நிறைவேற்ற ப்பட்டன.

இதுதவிர, ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்ட முன் வடிவு, சித்த மருத்துவப் பல் கலைக்கழகம் உருவாக்குதல், தனியார் பல்கலைக்கழகங்கள் உருவாக்குதல், பல்கலைக் கழகங்களில் ஆசிரியரல்லா பணியிடங்களை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வா ணையம் மூலம் நிரப்புவதற் கான சட்ட முன் வடிவுகள் என 18 சட்ட முன்வடிவுகள் நேற்று ஆய்வு செய்யப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

திருச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் – அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி திருச்சி தெற்கு மாவட்டக் கழக அலுவலகத்தில் மும்மதங்களைச் சேர்ந்த பெரியோர்களுக்கு பண்டிகை வாழ்த்துகளை தெரிவித்து பரிசுப் பொருட்களை வழங்கினார்.